# Women Labourers in the Works of So. Dharman

**V. Usha Pristrya Wilson**
*Full-Time Ph.D. Research Scholar (Reg. No. 22213154022019)*
*Department of Tamil, S.T. Hindu College, Nagercoil*
*Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**Dr. N. Nisha Nevis**
*Assistant Professor, Department of Tamil*
*S.T. Hindu College, Nagercoil*
*Affiliated to Manonmaniam Sundaranar University, Tirunelveli*

**மலர்: 10**

**சிறப்பிதழ்: 1**

**மாதம்: அக்டோபர்**

**வருடம்: 2025**

**P-ISSN: 2454-3993**

**E-ISSN: 2582-2810**

**DOI:**
https://doi.org/10.5281/zenodo.17346686

**Abstract**
*In the present era, due to the advancement of civilization and technology, the participation of women in all sectors of society has become natural. The influence and involvement of young women have significantly increased. Yet, domestic responsibilities—such as household chores, child care, meeting family needs, and washing clothes—are still regarded as women's duties alone. Because of poverty, women are forced to take up wage labour, work in construction, engage in plantation work, agricultural labour, and even dangerous tasks in firework factories. Poverty also compels young girls to work in beedi-rolling and fireworks industries from an early age. Despite performing the same tasks as men, women are paid lower wages. Before the onset of industrialization, agriculture formed the foundation of society. Women, like men, took part in cattle rearing, feeding livestock, and other agricultural duties. However, even today, society continues to treat women as subordinates. Balancing family responsibilities while advancing in the workforce remains a major challenge for women. Similarly, So. Dharman's novels Koogai and Thoorvai highlight women's subjugation and the injustices inflicted upon them. His works reveal the struggles of female labourers and critique the social structures that perpetuate inequality.*
***Keywords:*** *So. Dharman, Landlord, Thoorvai, Koogai*

**References**
1. Kapilasan, P. Narrative Structure in Nattrinai, MJ Publications House, 2002.
2. So. Dharman. Koogai, Adaiyalam Publications, 2020.
3. So. Dharman. Thoorvai, Adaiyalam Publications, 2017.
4. Thiru. V. Kalyanasundaranar. The Greatness of Women, Tamil Mann Publications, Chennai, 2006.
5. Puliyur Kesigan. Kurunthogai – Text and Interpretation, Sri Chenba Publications, 2020.
6. Maury Drilin Court. Women and Power in History.
7. Imayam Krishnan. Women Through the Ages, Kalachuvadu Publications, 2014.
8. Venkatasamy Nattar. Akananuru – Text and Interpretation, Samatha Publications, 2019.

# சோ.தர்மன் படைப்புகளில் பெண் தொழிலாளர்கள்

***வி. உஷா பிரிஷ்டியா வில்சன்***
பதிவுஎண். 22213154022019, முழுநேர முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்க்கலை ஆய்வகம், தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***முனைவர் நே. நிஷா நேவிஸ்***
உதவிப் பேராசிரியர், தமிழ்க்கலை ஆய்வகம்
தெ.தி. இந்துக்கல்லூரி, நாகர்கோவில்
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், திருநெல்வேலி

***ஆய்வுச்சுருக்கம்***
*இன்றைய காலகட்டத்தில் நாகரீக மற்றும் தொழில் நுட்ப வளர்ச்சியின் காரணமாக எல்லா துறைகளிலும் பெண்களின் பங்களிப்பு இயல்பாகிவிட்டது. இளம்பெண்களின் செல்வாக்கும் ஈடுபாடும் அதிகரித்து விட்டது. இருப்பினும் குடும்ப வேலைகளை சுமப்பது, குழந்தைகளை பராமரிப்பது, குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவது, துணிகளை சலவை செய்வது போன்ற அனைத்து வேலைகளையும் பெண்களுக்கே என்றே ஒதுக்கி வைத்துள்ளனர். குடும்ப வறுமையின் காரணமாக பெண்கள் கூலி வேலை பார்ப்பது, கட்டட வேலைக்கு செல்வது, தோட்டத் தொழில் செய்வது, வேளாண்மை செய்வதும் மற்றும் பட்டாசு தொழிற்சாலையில் வேலை செய்வது போன்ற ஆபத்தான வேலைகளையும் செய்து வருகின்றனர். வறுமையின் காரணமாக சிறுமிகளையும் சிறுவயதிலேயே பீடி சுற்றுவது, பட்டாசு ஆலைகளில் வேலைகளையும் திணிக்கின்றனர். பெண்கள் செய்கின்ற எல்லா வேலைகளுக்கும் ஆண்களை விட குறைவான ஊதியமே வழங்கப்படுகிறது. தொழில் துறையில் புரட்சி ஏற்படும் முன்னரே நம் சமூகமானது விவசாயத்தையே மூலமாக கொண்டிருந்தது. பெண்கள் அனைவரும் ஆண்களைப் போலவே கால்நடைகளை பராமரிப்பது, அவற்றிற்கு தீவனம் இடுவது போன்ற அனைத்து வேலைகளையும் முன்னெடுத்து செய்து வந்தனர். இருப்பினும் இச்சமூகமானது பெண்களை ஒரு அடிமையாகவே நடத்தி வருகின்றனர். குடும்ப பாரங்களையும் சுமந்துகொண்டு தொழில் துறையிலும் முன்னேறுவது என்பது பெண்களுக்கு சவாலாகவே காணப்படுகிறது. இதனைப் போலவே கூகை மற்றும் தூர்வை ஆகிய நாவல்களில் பெண் அடிமைத்தனம் மற்றும் பெண்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளை சோ.தர்மன் சுட்டிக்காட்டியுள்ளார்.*
***குறிப்புச் சொற்கள்:*** *சோ.தர்மன், நில உடமையாளர், தூர்வை, கூகை*

**முன்னுரை**

உலக வரலாற்றில்நாடோடி வாழ்க்கை முறையின்காலம்தொட்டுவேதகாலம்வரை பெண்களுக்கென தனிசுதந்திரம் உரிமைகள் பெற்றிருந்தனர். பின்பு படிப்படியாக உரிமைகள் குறையத் தொடங்கி பின் மறுக்கப்பட்டுள்ளன. தனிமனித தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் பொருட்டு போட்டி மனப்பான்மை நிலவியது. எனவே தேவையும், பூர்த்தி அடைந்தலும் அதிக விளைத் திறனும் மாறி மாறி தோன்றி தனிமனித உற்பத்தி வேட்கையை தூண்டியது. எனவே அளவுக்கு அதிகமான சுரண்டலும் மனிதனை ஆட்கொள்ளலாயின. உற்பத்தியாளருக்கும், சுரண்டல் காரர்களுக்கும் இடையில் சிக்கித் தவிக்கும் வாழ்வியல் போராட்டங்களுக்குள் பெண் தொழிலாளர்கள் ஆளாகி பாதிப்புக்கு உள்ளாகின்றனர்.

எனவே அப்பெண் தொழிலாளர்களின் வாழ்வில் ஏற்பட்ட மாற்றங்களுக்குள் வன்முறைக்கு ஆளாகியும், வறுமை துயரின் பிடியில் சிக்குண்ட தன்மையையும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

### வேத காலத்தில் பெண் தொழிலாளர்கள்

வேத காலத்தில் பெண்கள் பெரிதும் போற்றப்பட்டனர். குடும்ப வாழ்விலும், சமுதாய வாழ்விலும், அவர்களுக்கு மதிப்பு இருந்தது. அக்காலத்தில் ஆண்களுக்கு நிகராய் பெண்களும் பல துறைகளில் சம உரிமை பெற்று விளங்கினர்.

வயதுக்கு வந்த பெண்கள் தம் விருப்பப் படி திருமணம் செய்து கொள்ளும் உரிமை இருந்தமையை ரிக் வேதம் குறிப்பிடுகிறது.

பதஞ்சலி, பாத்யானார் ஆகியோர் வேத காலத்தில் பெண்கள் கல்வி கற்று சிறந்தமையை குறிப்பிட்டுள்ளனர். (பெண்ணின் பெருமை, பக், 32,33)

என்று எடுத்துரைக்கும் திரு.வி.க.வின் கருத்துக்கள் வேத காலத்தில் பெண்கள், ஆணுக்கு சமமாக மதிக்கப்பட்டமையை எடுத்துரைக்கிறது.

பின் வேதக காலத்தில் பெண்களுக்கான கல்வி மறுக்கப்பட்டது. பெண்கள் இல்லற கடமைகளை ஆற்றுவதே அவர்களுக்கான கடமை என்னும் அடிமை நிலை உருவானது. பெண்கள் பேசுப் பொருளாக எண்ணப்பட்ட சிந்தனை இக்காலத்தில் தான் தோன்றியிருக்க வேண்டும்.

***வினையே ஆடவர்க்கு உயிர் வாணுதல்***
***மனையுறை மகளிருக்கு அவ்வாாடவர்***
***(குறு,பா.9)***

என்று சங்ககால பெண்கள் ஆடவர்களையே தங்கள்உயிராக நினைத்து முன்னிறுத்தி போற்றியமையை அறியலாம்.

மக்கள் நிலையான வாழ்விடத்தை அமைத்து விவசாயம் செய்ய தொடங்கிய போது, பெண்கள் தொழிற்கருவிகள், அணிகலன்கள் செய்யும் அறிவை பெற்றனர். சமுதாய வாழ்க்கைக்காகத் தங்களை தயார்படுத்திக் கொண்டனர். இத்தகைய வாழ்வே பெண்களை அடிமை நிலைக்கு இட்டுச் சென்றது. (காலம்ந்தோறும் பெண்கள், ப. 21) என்ற இராஜம் கிருஷ்ணனின் கருத்து சிந்திக்கத்தக்கது.

### சங்க காலத்தில் பெண் தொழிலாளர்கள்

சங்க காலத்தில் வாழ்ந்த மக்கள் நிலங்களை ஐவகையாக பிரித்து அந்நிலங்களுக்கு ஏற்ப தொழில்களை அமைத்துக் கொண்டனர். குறிஞ்சி நிலப் பெண்கள் திணைப்புணம் காத்தமையும், மருதநிலப் பெண்கள் உழவு தொழில் மேற்கொண்டமையையும், நெய்தல் நில பெண்கள் மீன்களை உலர்த்தும் பணியினை மேற்கொண்டமையையும் அறிய முடிகின்றது.

***பெருநீர் அழுவத்து எந்தை தந்தை***
***கொழுமின் உணங்கள் படுபுள் ஓப்பிய***
***(நற்றி,பா. 33வரி13)***

என்ற அகநானூற்று பாடல் வரிகள் நெய்தல் நில பெண்களின் தந்தை கொண்டு வந்து சேர்த்த மீன்களை உலர்த்தும் பணிகளிலும், மீன்களை விற்கும் பணிகளிலும் பெண்கள் ஈடுபட்டமைய அறியமுடிகின்றது.

சங்ககால பெண்கள் நெசவுத் தொழில் மற்றும் சலவைத் தொழில் செய்தமையை,

***ஆளில் பெண்டிர் தாளில் செய்த***
***நுணங்கு நுண் பணுவல்***
***(அகம், பா, 24 வரி 11-12)***

என்ற பாடல் வரிகளின் மூலமும் அறிய முடிகின்றது. ஆண்களுக்கு நிகராக அனைத்து வேலைகளிலும் பெண்கள் ஈடுபட்டிருக்கின்றனர் என்பதையும் குடும்பத்தையும் சிறப்பாக வழி நடத்தி இருக்கின்றனர். என்பதையும் தெரிந்து கொள்ள முடிகிறது.

### நவீன காலத்தில் பெண் தொழிலாளர்கள்

தமிழகத்தில் ஆங்கிலேயர் ஆட்சி காலத்தில் கிறிஸ்தவ சமயம் நாடெங்கும் பரவி

கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்தது. இதன் பயனாக கல்வி கற்றவர்களின் எண்ணிக்கை பெருகியது. கல்வி அறிவினால் சமுதாய மாற்றம் ஏற்பட வழி கிடைத்தது. இக்கால கட்டத்தில் அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டு கல்வி கற்ற பெண்கள் வேலை வாய்ப்பினை பெற்றதால் அவர்களின் வாழ்வியல் சூழல்கள் மாற்றமடைந்தன. ஆண்களும், பெண்களும் சமம் என்ற நிலை உருவானது. பெண்கள் கல்வி வாய்ப்பினை பெற்று பணியாற்றியதுடன் பொருளாதார வளர்ச்சிக்கும் அடிக்கோலினர் மருத்துவம், கல்வி, பொறியியல், சட்டம், விவசாயம் முதலான துறைகளில் பெண்களின் பங்களிப்பு பெருகியது. தொழில் துறைகளில் மட்டுமில்லாமல் உயர்ந்த பதவிகளிலும் ஆட்சி அதிகாரங்களிலும் பங்குபெறும் அளவு பெண்கள் வாழ்க்கையில் உயர்ந்துள்ளனர்.

## சோ.தர்மன் படைப்புகளில் பெண் தொழிலாளர்கள்

நில உடமையாளர்களிடம் விவசாய தொழில் புரியும் பெண்கள் பலர் பணி புரிகின்றனர். நில உடமையாளர்களுக்கும், விவசாய கூலிகளுக்கும் இடையேயான சிக்கல்கள் நீண்ட காலமாக இருந்து வருகின்றன. இதனை மையமாகக் கொண்டு தூர்வை, கூகை ஆகிய நாவல்களில் ஆசிரியர் பதிவு செய்திருக்கிறார்.

## சுரண்டல்கள்

மனிதர்கள் தங்களுக்கான வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு பணியாற்றுகின்றனர். உழைக்கின்ற சூழலில் கொடுக்கும் ஊதியத்திற்கு அதிகமான உழைப்பினைஉறிஞ்சுதல்அல்லதுஅதிகநேர உழைப்பினை வாங்கி குறைந்த ஊதியத்தை கொடுத்தல் ஆகியன சுரண்டல்களாக கருதப்படுகின்றன. சோ.தர்மனின் படைப்புகளில் பெண் தொழிலாளர்களின் உழைப்பு சுரண்டல்களை விளக்கியுள்ளார். பெண்களின் உழைப்பு சுரண்டப்படுவது காலம், காலமாக நடைமுறையில் உண்மையை மிகவும் நுட்பமான நிகழ்வுகள் கொண்டு எடுத்துக் காட்டப்படுகிறது. படைப்பாளர் சுட்டியுள்ள தொழிற் களங்களில் பெண் தொழிலாளர்கள் உழைப்பு சுரண்டப்படுவதை கீழ்காணும் வகைகளில் பிரிக்கலாம்.

அதிகமான உழைப்பு நேரம், குறைவான கூலி, பாலியல் சுரண்டல், உழைப்பு சுரண்டல் போன்றவைகளாகும்.

## அதிகமான உழைப்பு நேரம்

முதலாளித்துவம் தலையெடுத்த காலத்தில் அடிமைநிலை, கொத்தடிமை நிலை ஆகியவற்றின் காரணமாக பணி நேரம் வரன்முறைப் படுத்தப்படாமல் உழைப்பாளர்கள் இயந்திரம் போல உழைக்க பணிக்கப்பட்டனர். உறங்கும் நேரம் தவிர ஒரு நாளைக்கு பதினெட்டு மணி நேரம் வேலை செய்யும் நிலை திணிக்கப்பட்டது.

பட்டாசு தொழிற்சாலையில் பணியாற்றும் பெண்கள், சிறுவர், சிறுமியர் நீண்ட நேரம் வேலை வாங்கப்படுகின்றனர்.

பிள்ளைகளை ஏற்றி போகும் கம்பெனி பஸ் வாசலில் வந்து நின்றது. அதன் கண்ணாடியில் பட்ட வெயிலில் மஞ்சளாய் மின்னியது. குளித்தும் குளியாமலும் ஓடி வந்த சிறுவர்களும், சிறுமியர்களும் இடம் பிடிக்க சண்டை போட்டார்கள். (தூர்வை, ப.73)

அதிகாலையிலேயே சிறுவர்கள் வேலைக்கு சென்றதை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

## குறைவான கூலி

உழைக்கும் தொழிலாளர்களுக்கு நியாயமான கூலி வழங்க வேண்டியது உழைப்பை பெறுபவர்களின் கடமையாகும். ஆனால் உழைப்பாளர்களின் உடல் உழைப்பை உறிஞ்சிஅதற்கானகூலியைசரிவரவழங்காத கூலிச் சுரண்டல் சமூகத்தில் நடைபெற்று

வருகின்றமையை தெளிவாக்குகின்றது. தொழிலாளர்களுக்கு சரியான கூலி கொடுக்கப்படாவிட்டால் அவர்களின் வாழ்க்கை துன்பத்திற்கு உள்ளாகும் நிலையை, ரொக்கக் காசென்றால் வாரக் கடைசியில் வாங்கும் சம்பளக் கணக்கொடு சேராது. வேலை முடிந்ததும் உடனே கைக்கு வந்து விடும். ஊர் போவதற்காக பஸ் சார்ஜ் கொடுக்கப்படுவதோடு டீ, காபி, பன், பக்கோடா, மிக்சர் ஓசியில் கிடைக்கும். கொஞ்ச பேர் இறங்கி கொள்ள பஸ் புறப்பட்டு போனது. அவர்கள் பாக்கெட் ரூமிற்குள் வட்டமாய் உட்கார்த்த போது ஒழித்து வைத்திருந்த பெட்ரோ மார்க்ஸ் லைட்டுகள் பொருத்தப்பட்டன. பல கலர்களில் அம்பாரமாய் குமித்து வைக்கப்பட்டிருந்த பெடிகளை சுற்றிலும் உட்காந்து எண்ணி எண்ணி பாக்கெட் போடத் துவங்கினார்கள். (தூர்வை, ப.73) என்று ஆசிரியர் விளக்குகிறார்.தேவைக்கு அதிகமாக உற்பத்தி பொருளை தயாரிக்க குறைவான கூலி கொடுத்து வேலை வாங்கும் முதலாளி வர்க்கத்தின் செயல்பாடுகள் வெளிப்படுகின்றன.

**பாலியல் சுரண்டல்**

குடும்ப வறுமையை போக்கவும், தங்கள் அடிப்படை தேவைகளை நிறைவு செய்யவும் வேலைக்குச் செல்லும் பெண்கள் பாலியல் ரீதியான சுரண்டலுக்கு உள்ளாகின்றனர். ஜமீன்கள், ஆதிக்சாதியினர், கணக்குப் பிள்ளைகள் தங்கள் ஆசையைத் தீர்த்துக் கொள்ளும் பொருட்டு அணுகுகின்றனர். இதனை சோ.தர்மனின் கூகை நாவலில் காணமுடிகின்றது.

கங்கையா நாயக்கர் கை நிறைய வெற்றிலையும், அங்கு விலாஸ் புகையிலை பட்டையுடனும் எதிரே நிற்பார் களை செதுக்கியத் தூர எறிந்து விட்டு பெரு வாய்க்காலுக்குள் கால்நீட்டி உட்காருவாள். சின்னக்காளி, நீட்டிய கையில் வெற்றிலை தராமல், நீட்டிய தொடைமேல் அழுத்தி வைப்பார். வரப்பில் மேல் உட்கார்ந்த முகம் பார்ப்பார். (கூகை,ப.34)

என்று எடுத்துரைப்பதில் இருந்து ஒடுக்கப்பட்ட பெண்களை ஆதிக்க சாதியினர் பாலியல் சுரண்டல் செய்வதையும், உடன் இருப்போர் அமைதியாக வேடிக்கை பார்க்கும் தன்மையையும் புரிந்து கொள்ள முடிகிறது.

இன்றைய காலகட்டத்திலும் பெண்களுக்கு எதிராக பல்வேறு வன்கொடுமைகள் நிகழ்கின்றன. அனுதினம் பாலியல் கொடுமைகள் பெண் பிள்ளைகளுக்கு நடக்கின்றன. சிறு பெண்குழந்தைகள் முதல் வயது முதிர்ந்த பெண்கள்வரை இதில் பாதிக்கப்படுகின்றனர். இவற்றில் இருந்து பெண்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்றால் கடுமையான தண்டனைகள் உடனே நிறைவேற்றப்பட வேண்டும். பாலியல் தீண்டலைஏற்படுத்துகிறவர்களுக்குகடுமையாக தண்டனைகள் கிடைக்கும் போது தவறுகள் குறையும் இதனை அரசாங்கம் நடைமுறைப்படுத்தினால் பெண்களுக்கு பாதுகாப்பு ஏற்படும்.

**உழைப்பு சுரண்டல்**

கடை முதலாளிகள் ஒருவனது உழைப்பை வாங்கிக் கொண்டு அதற்கான கூலியை கொடுக்காமல் ஏமாற்றுவது உழைப்பு சுரண்டல் ஆகும். இச்சுரண்டலால் அனைத்து துறைகளிலும் பெண் தொழிலாளர்கள் பாதிக்கப்படுகின்றனர். பெண் தொழிலாளர்களை பணியில் அமர்த்தி இவர்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுக்காமல், இரவு பணி, குறைவான கூலி, ஊதிய ஏமாற்றம் போன்றவைகளை செய்கின்றனர்.

பட்டாசு தொழிற்சாலையில் பட்டாசு தயாரிக்கும் இடத்தில் ஒரு அறையில் நான்கு பேர் மட்டுமே அமர்ந்து பணி புரியவேண்டும். வெளியே நான்கு தண்ணீர் தொட்டிகளும் அமைக்கப்பட வேண்டும்.

இந்த அடிப்படை வசதி கூட செய்து கொடுக்கப்படாமல் சுயநல லாப நோக்கத்தோடு முதலாளிகள் உழைப்பாளர்களின் உழைப்பினை சுரண்டிய விதத்தினை ஆசிரியர் எடுத்துரைக்கிறார்.

அந்தச் சின்ன சின்ன கட்டிடத்தில் ஒவ்வொன்றிலும் நாலு பக்கமும் வாசலுக்கு பக்கத்திலே தண்ணீர் தொட்டிகள் அந்த அறைகள் ஒவ்வொன்றிலும் சிறுசும், பெருசுமாய் தீப்பெட்டிக்குள் குச்சிகளாய் விரைந்து கிடந்தார்கள். (கூகை,ப. 67) என்று வெளிப்படுத்துவதில் இருந்து அடிப்படை வசதியின்றி அதிகமான வேலையாட்களை கொண்டு உற்பத்தி நேரத்தில் நிறுவனம் நடத்தும் முதலாளிகளின் சுயநலத்தினை அறிய முடிகின்றது. மேலும் அரசாங்க அதிகாரிகளை சுலபமாக ஏமாற்றியும் செய்திருந்தையும் ஆசிரியர் சுட்டிக் காட்டியுள்ளார்.

பட்டாசு தொழிற்சாலைகளில் இன்றைக்கும் அதிக அளவு பெண்பிள்ளைகள் வேலை செய்கின்றனர். அதிலும் குழந்தை தொழிலாளர்கள் அதிக அளவில் காணப்படுகின்றனர். குழந்தை தொழிலாளர்களை ஏன் வேலைக்கு அமர்த்துகிறார்கள் என்று கவனித்தால் குழந்தைக்கு சிறு ஊதியம் வழங்கி அதிக அளவு வேலை வாங்கும் அவல நிலை காணப்படுகிறது. மேலும் குடும்ப வறுமையினாலும், படிக்க வைக்கும் வசதி இல்லாத காரணத்தினாலும், குழந்தைகள் வேலைக்கு அனுப்பப்படுகின்றனர். இதனால் சிறு வயதிலேயே கல்வியை இழந்து, வறுமையில் உழலும் அவல நிலை உள்ளது. சிறு குழந்தைகளை வேலைக்கு அமர்த்து பவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுத்து கடையினை மூட வேண்டும். பெண்கள் வேலை பார்க்கும் தொழிற்சாலையில் ஆண்களைப் போலவே பெண்களும் எட்டு மணி நேரம் மட்டுமே வேலை பார்க்கும் நிலை உருவாக வேண்டும். அதிக நேரம் வேலை வாங்குவது குறைந்த ஊதியம் வழங்குவது போன்ற நிறுவனங்களை மூட வேண்டும் உழைப்புக்கு ஏற்ற ஊதியம் வழங்கப்பட வேண்டும்.

## கல்வி வாய்ப்பின்மை

தொழிலாளர்களின் உழைப்பிற்கு ஏற்ற வருமானம் கிடைக்காத காரணத்தால் தங்கள் குழந்தைகளுக்கான எதிர்கால வாழ்க்கையின் இன்றியமையாத தேவைகளில் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடிவதில்லை. அவற்றில் ஒன்றான கல்வியை கொடுக்க முடியாத சூழலில் சிறார்கள் கல்வி கற்க இயலாத சூழலையும் பள்ளி படிப்பினை பாதியில் நிறுத்திவிட்டு தொழிலாளர்களாக மாறும் சூழலையும் அறியமுடிகிறது.

பெண் பிள்ளைகளுக்கு கல்வி கட்டாயம் வழங்கப்பட வேண்டும். கல்வியின் முக்கியத்துவத்தை அறிந்து பெண் பிள்ளைகள் கல்வி கற்க அனைத்து பெற்றோர்களும் சம்மதிக்க வேண்டும். கல்வி கற்பதால் குழந்தைகளின் எதிர்காலம் நன்கு அமையும் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். கல்வி கற்பதால் அறிவு திறன் பெற்று நன்மை தீமைகளை ஆய்ந்துணறக் கூடிய தன்மையினை பெறுவார்கள் என்பதை பெற்றோர்கள் தெரிந்துகொள்ள வேண்டும்.

## முடிவுரை

பெண்ணானவள் போற்றுதலுக்குரிய தெய்வமாக வணங்கப்படும், நம் நாட்டிலே பெண்ணை அடிமைப்படுத்தி அவர்களுக்கு உரிமை மறுத்து வீட்டிற்குள்ளேயே பூட்டி வைத்திருந்தனர். பிறகு வறுமையினால் பெண்கள் கூலி வேலைக்கு செல்லும் அவல நிலை ஏற்பட்டது. பெண்கள் அனைவருக்கும் ஏற்ற தாழ்வு இல்லாமல் கல்வி வழங்கப்பட வேண்டும். பெண்களுக்கு அனைத்து வேலைத்தளங்களிலும் பாதுகாப்பு ஏற்படுத்தப்பட வேண்டும். பெண்கள் சுதந்திரமாக வேலைக்கு செல்லும் நிலை ஏற்பட்டால் அனைத்து பெண்களும்

சாதனை பெண்மணிகளாக மாறலாம். பெண் குழந்தைகளை அழிக்கும் சமுதாயத்தில் இருந்து அவர்களை காப்பாற்றி அதற்கான விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்த வேண்டும். பெண்களுக்கு ஆண்களைப் போன்று சமமான ஊதியம் வழங்கி ஏற்றத் தாழ்வுகளை நீக்க வேண்டும். இதன் மூலம் பெண் தொழிலாளர்களின் துன்பங்களை நீக்கலாம்.

**துணைநூற்பட்டியல்**


1. கபிலரசன். ப, நற்றிணை உரைநடை வடிவில், எம்.ஜே. பப்ளிகேஷன்ஸ் ஹவுஸ் - 2002.
2. சோ. தர்மன், கூகை, அடையாளம் பதிப்பகம் - 2020.
3. சோ.தர்மன், தூர்வை, அடையாளம் பதிப்பகம் - 2017.
4. திரு.வி. கல்யாண சுந்தரனார், பெண்ணின் பெருமை, தமிழ் மண் பதிப்பகம் சென்னை - 2006.
5. புலியூர் கேசிகன், குறுந்தொகை மூலமும் உரையும், ஸ்ரீ செண்பா பதிப்பகம் - 2020.
6. மெளரி டிரீலின் கோர்ட், வரலாற்றில் பெண்களும் அதிகாரமும்.
7. ராஜம் கிருஷ்ணன், காலந்தோறும் பெண்கள், காலச்சுவடு பதிப்பகம் - 2014.
8. வேங்கடசாமி நாட்டார், அகநானூறு மூலமும் உரையும், சாரதா பதிப்பகம்-2019.